முருகப்பெருமான் துணை

**மகான் வரதரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.04.2024,** திங்கட்கிழமை

1. ஞானப்படைகள் உருவாக்கியே
ஞானயுகம் படைத்தருள வந்த
ஞான தேசிகனே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன்பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குரோதி ஆண்டு தகரின் திங்கள்
ஈரான திகதி சோமவாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 02 ம் நாள், 15.04.2024, திங்கட்கிழமை)
இயம்பிடுவேன் வரதரிஷி யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உயர் ஞானி அரங்கன் தரும்
ஞான உபதேச வழிகள் தன்னை
நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே சாமானியர்கள் தானும்
வரம் போல சக்திகள் கூடியே
பெருமைபட தன்நிலை உயர்வர்
பிரம்ம ஞான சூட்சுமம் அருளும்
5. அருளும் அரங்கன் வழிமுறைகள்
அகிலத்துக்கு மாற்றம் தரும்படி
வரமாக நிரம்பி இருக்கவே
வரவேற்று உலகோர் வாய்ப்பாக
6. வாய்ப்பாக பின்பற்றி கடைபிடிக்க
உயிர்கொலை நீக்கி தயவை
மெய்ஞானமாக அடையாளமாக்கி
முழுமையான சரணாகதி கொண்டு
7. கொண்டுமே சைவநெறி குன்றா
குருமொழி மாறாத வண்ணம்
தொண்டுகள் பலவாறு செய்து
தொடர்சேவை பிரணவக்குடிலை அனுகி

8. அனுகி ஆற்றல்பட செய்துமே
ஆன்மீக ஞான அரசியல் களம்
ஞானசபையாக கட்டமைப்பை
நம்பகம்பட அரங்கன் ஆசிபடச் செய்து
9. செய்துமே மக்களெல்லாம் இணைய
சேவையுடன் ஞானிகள் பூசைபட
அய்யமற அன்னதான கிளைகள்
அளவிலா எங்கும் அமைத்து
10. அமைத்து தருமம் பெருக்கி
அகிலத்தின் வறுமை பசிபிணி
நேமமுடன் விரட்டி நின்று
நிலமதனில் எங்கும் தருமவான்கள்
11. தருமவான்கள் நிரம்ப களம்
தவராஜன் ஞான ஆட்சி வேண்டி
வருமுலகில் காண மாற்றம் கிட்டும்
வழங்கிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—